அவசரக்கூட்டம்

2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11.12.2025 தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு வடலூர் நகராட்சி அலுவலகத்தில் அவசரக்கூட்டம் நகர்மன்ற தலைவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. அதுசமயம் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

முன்னிலை : திரு. சு. சிவக்குமார், நகர்மன்ற தலைவர், வடலூர் நகராட்சி.

பொருள் எண்.1

வடலூர் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் கடை கட்டிடங்கள் முன் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் வைப்பது தொடர்பாக இந்நகராட்சி நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (ந.க.ம.தீர்மான எண்.756 நாள்.30.05.2025) அதன்படி புதிய பேருந்து நிலைய கடைகளை A, B மற்றம் C என வகைபடுத்தி மூன்று நாட்களில் முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளிகள் வைக்கப்பட்டது. கடைகளின் எண்ணிக்கை 110 மற்றும் ஒரு உணவகம் சேர்த்து மொத்தம் 111 கடைகள் ஆகும்.

முதல் கட்டமாக A–BLOCK கடைகள் 01.09.2025 தேதியும். B–BLOCK கடைகள் 02.09.2025 மற்றும் C–BLOCK கடைகள் 03.09.2025 தேதியும் நடைப்பெற்றது. மேற்காணும் தேதியில் வைக்கப்பட்ட கடைகளில் கீழ் காணும் கடை எண்கள் மட்டுமே முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தபுள்ளி மூலம் எடுக்கப்பட்ட கடைகள் ஆகும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 25 | 26 | 27 | 28 | 29 | 32 | 33 | 34 | 36 |
| 37 | 38 | 39 | 40 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 |
| 48 | 49 | 50 | 58 | | | | | | |

முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தபுள்ளிகளில் போகாத மீதம் உள்ள 66 கடைகள் ஒவ்வொரு வாரம் புதன் கிழமைகளில் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளிகள் வைக்கப்பட்டது. அதன்படி 24.09.2025 ஆம் தேதியன்று நடத்தப்பட்ட மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்காணும் கடை எண்கள் மட்டுமே மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளி எடுக்கப்பட்ட கடைகள் ஆகும்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 14 | 24 | 30 | 31 | 35 | 41 | 52 | 54 | 57 | 77 |

மேலும் 24.09.2025 ஆம் தேதியில் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளியில் போகாத 55 கடைகளுக்கு மீண்டும் 08.10.2025 (புதன் கிழமை) ஆம் தேதியில் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளி வைக்கப்பட்டதில் கடை எண். 59 மட்டும் மறு ஒப்பந்தப்புள்ளில் எடுக்கப்பட்டது.

எனவே, மேற்படி மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளியில் போகாத கடைகள் மொத்தம் 54 கடைகளை அடுத்த புதன் கிழமை 15.10.2025 ஆம் தேதியில் வைக்கப்பட்டது. ஆனால் அன்று யாரும் ஏலமோ அல்லது ஒப்பந்தப்புள்ளியோ கோரவில்லை. பின்பு 29.10.2025 ஆம் தேதியில் நடத்தப்பட்ட மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளியில் கடை எண்.55 மற்றும் 05.11.2025 ஆம் தேதியில் நடத்தப்பட்ட மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளியில் கடை எண்.60 மட்டுமே மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளியில்

எடுக்கப்பட்டது. மீதம் உள்ள 52 கடைகளுக்கு தொடர்ந்து புதன் கிழமையான 12.11.2025, 19.11.2025, 26.11.2025, 03.12.2025 மற்றும் 10.12.2025 ஆம் தேதியில் நடைபெற்ற மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளியில் யாரும் கலந்து கொள்ள முன்வரவில்லை.

எனவே, ஏலம் போகாத கடைகள் மறுஒப்பந்தபுள்ளிகள் ஐந்து முறை கோரப்பட்டும் எவரும் எடுக்க முன்வராத காரணத்தினால் நகராட்சியின் வருவாய் இழப்பினை சரிசெய்திடவும் மேலும் 01.12.2025 அன்று நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி போகாத கடைகளுக்கு வைப்பு தொகையில் ரூ.2,00,000/-ஐ குறைத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பிளாக் | கடை விவரம் | ஏலம்/ஒப்பந்தம் போகாத கடைகள் | அளவு | நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட செய்யப்படக் கூடிய கடைகளின் வாடகை ரூ. (ஒரு மாதம்) | கடை ஒன்றுக்கு செலுத்த வேண்டிய பழைய டேவணித் தொகை (கேட்பு வரைவோலையாக (DD) மட்டும்) | தற்போது குறைக்கப்பட்டுள்ள கடை ஒன்றுக்கு செலுத்த வேண்டிய டேவணித் தொகை (கேட்பு வரைவோலையாக (DD) மட்டும்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | |
| 1 | A | பேருந்து நிலையம் வெளிபுற கடைகள் மேல் தளம் (பண்ருட்டி மெயின் ரோடு) | 51 ,53, 56, 61 முதல் 65 மற்றும் 81 | 166.04 சதுரடி | 7,500/- | 5,00,000/- | 3,00,000/- |
| | | பேருந்து நிலையம் உட்புற மேல்தள கடைகள் | 66 to 76 மற்றும் 78 to 80 | 166.04 சதுரடி | 5,600/- | 4,00,000/- | 2,00,000/- |
| 2 | B | பேருந்து நிலையம் உட்புற மேல்தள கடைகள் | 82 to 104 | 166.04 சதுரடி | 5,600/- | 4,00,000/- | 2,00,000/- |
| 3 | C | பேருந்து நிலையம் உட்புற மேல்தள கடைகள் | 105 to 110 | 166.04 சதுரடி | 5,600/- | 4,00,000/- | 2,00,000/- |

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.170/2025/அ1

நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி.